# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au

# ஆண்டிறுதிப் பரீட்சை 2023

வகுப்பு: ஏழு திகதி:- 25-11-23

நேரம்: 2½ மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி மஞ்சு விஜயகுமார்

மாணவர் பெயர்:___________________________________

| வினாக்கள் | வினா புள்ளி | பெற்ற புள்ளி |
|---|---|---|
| வினா 1 | 20 | |
| வினா 2 | 14 | |
| வினா 3 | 12 | |
| வினா 4 | 14 | |
| வினா 5 | 20 | |
| வினா 6 | 20 | |
| மொத்தப் புள்ளிகள் | | |

| வினா இல | 1 | புள்ளிகள் | 20 | பக்கம் | 2 |
|---|---|---|---|---|---|

**தரப்பட்ட பகுதியை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்**

“குயில் போன்ற குரல்” இந்த உவமையை இனிய குரல் உடையவர்களுக்குக் கூறுவார்கள். எல்லோரையும் கவரும் தன்மையுடைய குயிலுக்கு கோகிலம் என்றும் பெயருண்டு. மரங்களில் தளிர்களும் மொட்டுக்களும் தோன்றும் வசந்தகாலத்தில் குயில் கீதம் பாட ஆரம்பிக்கும்.
குயிலின் உருவத்தைத் தெரியுமா? பார்ப்பதற்குக் காகத்தைப் போலவே இருக்கும். காக்கையும், குயிலும் ஒரே நிறம்தான். குயிலின் உடல் சற்று மெலிந்து வால் சற்று நீளமாக இருக்கும். ஆண் குயிலுக்கும் பேடைக்கும் தோற்றத்தில் வேறுபாடு உண்டு.

தந்திரத்தில் பிரபலமான காக்கையை விட குயிலுக்குச் சாமர்த்தியம் அதிகம். குயிலுக்குக் கூடுகட்டத் தெரியாது. காக்கையின் கூட்டிலேயே முட்டையிடும். இரண்டினதும் முட்டைகள் ஒரே தோற்றமுடையவை. இரு பறவைகளும் சித்திரை, ஆடி மாதங்களுக்கிடையில் முட்டையிடுபவை. ஆணும், பெண்ணுமாக, அடைகாக்கும். காக்கை ஒன்று அடைகாக்கும் போது மற்றையது உணவு தேடச்செல்லும். பெண் குயில் முட்டையிடும் நேரம் வந்ததும் ஆண்குயில் காக்கைக் கூடு இருக்கும் மரத்தைக் கண்டறியும். அந்தக் கூட்டிற்கு அருகே சென்ற குயில் குரலெழுப்ப, கோபம் கொண்ட காகம் குயிலைத் துரத்திச் செல்லும். அடைகாக்கும் காகத்தை ஆண்குயில் நீண்ட நேரம் அலைய வைக்கும். இச்சமயத்தில் பெண்குயில் காகத்தின் கூட்டில் புகுந்து முட்டை இடுகின்றது.
முட்டையிட்டு முடிந்ததும் குயில் குரல் எழுப்ப ஆண்குயில் வேகமாகப் பறந்துவிடும். பிறகென்ன, ஒன்றும் அறியாத காக்கை கூட்டிற்கு வந்து தன் முட்டைகளோடு குயிலின் முட்டைகளையும் அடைகாக்கும்.

1. குயிலும் காகமும் எவ்வாறு உருவத்தில் வேறுபடுகின்றன?
2.

   ……………………………………………………………………………………

   ……………………………………………………………………………………

   ……………………………………………………( 4)

3. குயில் சாமர்த்தியம் உள்ள பறவை என்பதை ஏற்றுக்கொள்கிறீர்களா? விளக்கம் தருக?

   ……………………………………………………………………………………

   ……………………………………………………………………………………

   ……………………………………………………………………………………

   …………………………………………………….

( 4)

3.1 குயிலின் மறுபெயர் ஒன்றினைக் குறிப்பிடுக

……………………………………………………………………………………

………………………………………………………………………

( 2 )

3.2 இரு பறவைகளும் முட்டையிடும் காலப்பகுதி எது?

……………………………………………………………………………………
……………………………………………………………………………………
………………………………………………………

( 2 ).

4. இந்த பந்தியில் இருந்து புதிதாக நீங்கள் அறிந்த விடயங்களை தருக?

……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………

( 4)..

5பின்வரும் சொற்களை வைத்து வாக்கியங்கள் அமைக்குக

1. வசந்தகாலம்:-

……………………………………………………………………………………
……………………………………………………………………………………
……………………………………………………………………..

( 2 )

2. குரல்:-

……………………………………………………………………………………
……………………………………………………………………………………
……………………………………………………………………..

( 2 )

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **வினா இல** | 2 | **புள்ளிகள்** | 14 | **பக்கம்** | |

**அடைப்புகுறியினுள் உள்ள மிகவும் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து பந்தியைப் பூரணப்படுத்துக.**

சுற்றுலாவின் 2ஆம் நாள் அதிகாலையிலேயே (ஓய்வை/தூக்கத்தை/சோம்பலை) விட்டு எழுந்து புறப்பட ஆயத்தமானோம். “பிள்ளைகளே, இப்போது நாங்கள் எங்கே செல்லப்போகிறோம் என்று தெரியுமா? என்று ஆசிரியர் சத்தமாகக் (கூறினார்/கேட்டார்/பேசினார்). மாணவர்கள் அனைவரும் ‘தெரியாது’ என்பதுபோல தலையசைத்தனர். அப்போது ஆசிரியர் “இப்போது நாங்கள் இலங்கையிலுள்ள

(அழகிய/உயரமான/தாழ்வான) நீர்வீழ்ச்சிகளில் ஒன்றான ரம்போட நீர்வீழ்ச்சியைப் (காண்பதற்காக/பார்ப்பதற்கு/இரசிப்பதற்காக) செல்கின்றோம்" என்றார். மாணவர்கள் அனைவரும் மிகக் (குதுாகலத்துடன்/துக்கத்துடன்/வெறுப்புடன்) சத்தமிட்டு துள்ளிக் குதித்தனர். "சரி பிள்ளைகளே, நீங்கள் இருவர்சேர்ந்து (கூட்டம்/தனியாக/சோடியாக) சென்று பேருந்தில் ஏறிக் கொள்ளுங்கள்" என்றார். பேருந்து ஓடத் தொடங்கியது. வழிநெடுகிலும் மலைகளில் தேயிலை தோட்டங்கள் (மேடுபள்ளம்/பச்சைக்கம்பளம்/ குன்றுகுழியும்) விரித்தாற் போல காட்சியளித்தன.

| வினா இல | 3 | புள்ளிகள் | 12 | பக்கம் | |
|---|---|---|---|---|---|

**துண்டுப்பிரசுரம்**

பொது மக்களே!

**மின்னல்! மின்னல்!**

மின்னலில் இருந்து பாதுகாப்புப் பெறும் வழிகளை ஞாபகத்தில் வைத்திருங்கள்.

- இடி ஒலியை நாம் உணர்ந்தால் மின்னலால் தாக்கப்படக்கூடிய பிரதேசத்தில் உள்ளோம் என்பதை அறிந்து கொள்ளவேண்டும்.
- திறந்த வெளிகளில் நிற்காமல் பாதுகாப்பான இடங்களை நோக்கிச் செல்லுங்கள்.
- உயர்ந்த மரங்களின் கீழோ மரங்களின் அருகிலோ நிற்க வேண்டாம்.
- வீட்டின் மின் இணைப்பைத் துண்டித்து விடுங்கள்.
- மின்னல் தாக்கம் நிகழும்போது குளிப்பதைத் தவிருங்கள்.
- குளிரூட்டிகளின் மின் இணைப்பைத் துண்டித்து விடுங்கள்.
- மின் கம்பங்களுக்கு அருகில் நிற்காதீர்கள்.

முன் எச்சரிக்கையுடன் செயற்படுங்கள்.

தகவல் - வளிமண்டலவியல் திணைக்களம்.

மேலுள்ள துண்டுப்பிரசுரத்தை வாசித்து வினாக்களுக்கு பூரணமான விடை எழுதுங்கள்.

1. இத்துண்டுப்பிரசுரம் எப்பாதிப்பிலிருந்து எம்மைப் பாதுகாக்க அறிவுறுத்துகிறது?
   ……………………………………………………………………………………
   ……………………………………………………………………………………
   …………………………………………………………………….
2. இடி, மின்னலின் போது நாம் நிற்கக் கூடாத இடங்கள் எவை?

……………………………………………………………………………

……………………………………………………………………………

…………………………………………………………

3. இடி, மின்னலின் போது தவிர்க்க வேண்டிய விடயங்கள் எவை?
……………………………………………………………………………

……………………………………………………………………………

……………………………………………………………………………

……………………………………………………….

4. இந்த முன்னெச்சரிக்கை அறிவுறுத்தலை விடுப்போர் யார்?
……………………………………………………………………………

………………………………………………………………

| வினா இல | 4 | புள்ளிகள் | 14 | பக்கம் | |
|---|---|---|---|---|---|

பின்வரும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி பந்தியமைப்பில் எழுதுங்கள்

1. கோவலனின் மனைவி கண்ணகி.
2. இதனை அறிந்த கண்ணகி, துடிதுடித்து அழுதாள்.
3. சிலப்பதிகாரம் கோவலன் கண்ணகி வரலாற்றைக் கூறுகிறது.
4. பாண்டிய மன்னனின் அரசவைக்குச் சென்று தன் கணவன் கள்வனல்லன் என்பதை நிரூபித்தாள்.
5. கோவலன் கள்வனாக குற்றஞ்சாட்டப்பட்டு கொலை செய்யப்பட்டான்.
6. இன்றுவரை கண்ணகி கற்புக்கரசியாகவே போற்றப்படுகிறாள்.
7. கற்பின் திறத்தால் மதுரையை எரித்தாள்.

| வினா இல | 5 | புள்ளிகள் | 20 | பக்கம் | |
|---|---|---|---|---|---|

நீர் சென்ற வெளிநாட்டு உல்லாசப் பிரயாணம் பற்றி உமது நண்பர் ஒருவருக்கு 60 சொற்களுக்கு குறையாமல் கடிதம் எழுதுக

| வினா இல | 6 | புள்ளிகள் | 20 | பக்கம் | |
|---|---|---|---|---|---|

பின்வருவனவற்றுள் ஒன்றைப்பற்றி 120 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக. •

1. நீங்கள் கலந்துகொண்ட ஒரு திருமணவிழா.
2. தமிழ்ப் பாடசாலையில் நடைபெற்ற வாணிவிழா
3. நீங்கள் விரும்பும் பெரியார்